# பெண்களே நிர்வகிக்கும் மெட்ரோ ரயில் நிலையங்கள்

**சென்னை, ஜூலை 31:** பெண்களை முன்னிலைப்படுத்தும் வகையில், ஷெனாய்நகர், கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையங்களை முழுமையாக பெண்களே நிர்வகிக்கும் பொறுப்பை மெட்ரோ ரயில் நிர்வாகம் வழங்கியுள்ளது.

முதல்கட்டமாக, ஷெனாய் நகர் மெட்ரோ ரயில் நிலையத்தில் பெண்கள் மட்டும் நிர்வகிக்கும் பொறுப்பு செவ்வாய்க்கிழமை முதல் வழங்கப்பட்டது. கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்தில் பெண்கள் மட்டும் நிர்வாகிக்கும் பொறுப்பு புதன்கிழமை வழங்கப்படவுள்ளது.

சென்னையில் 26 மெட்ரோ ரயில் நிலையங்கள் உள்ளன. இதில், இருபாலரும் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில், பெண்களை முன்னிலைப்படுத்தி சில மெட்ரோ ரயில் நிலையங்களை நிர்வகிக்க மெட்ரோ ரயில் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. முதல்கட்டமாக , ஷெனாய்நகர் மெட்ரோ ரயில் நிலையத்தை பெண் ஊழியர்களே நிர்வகிக்கும் பொறுப்பு செவ்வாய்க்கிழமை முதல் வழங்கப்பட்டது.



பெண்கள் மட்டும் நிர்வகிக்கும் ஷெனாய் நகர் மெட்ரோ ரயில் நிலையம்.

இந்த மெட்ரோ நிலையத்தில் அறிவிப்பு செய்தல், டிக்கெட் கொடுத்தல், கண்காணித்தல், பயணிகளை பரிசோதனை செய்தல், சுத்தம் செய்தல், நிலையக் கட்டுப்பாடு பணி உள்ளிட்ட அனைத்து பணிகளிலும் பெண் ஊழியர்களே ஈடுபடுத்தப்படுகின்றனர். காலை, மாலை என இரண்டு ஷிப்டுகளில் தலா 15 பெண் ஊழியர்கள் பணிகளில் ஈடுபடுகின்றனர். அதேபோல், கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்திலும் பெண் ஊழியர்கள் மட்டுமே நிர்வாகிக்கும் பொறுப்பு புதன்கிழமை அளிக்கப்படுகிறது.

இது குறித்து மெட்ரோ ரயில் நிர்வாகத்தின் அதிகாரிகள் கூறியது:

பெண் ஊழியர்கள் மிகவும் திறமையோடு பொறுப்புகளை உணர்ந்து செயல்படுகின்றனர். ஷெனாய்நகர், கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையங்களில் அனைத்து பணிகளையும் பெண் ஊழியர்களே கவனிப்பர்.

மெட்ரோ ரயிலில் பெண் பயணிகளின் பாதுகாப்புக்காக சிறப்பு பெண்கள் பெட்டி உள்ளது. பெண் பயணிகள் மற்றும் பெண் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், மெட்ரோ ரயில்கள் மற்றும் மெட்ரோ நிலையங்களில் கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன. அவசர காலத்தில் உதவிக்கு ரயில் இயக்குபவரிடம் அவர்கள் பேச முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.